**ஜனவரி – 31**

# TNPSC துளிகள்

- கச்சா பனை எண்ணெய் (crude palm oil - CPO) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட, வெளுக்கப்பட்ட மற்றும் மணம் நீக்கப்பட்ட (refined, bleached and deodorised - RBD) பனை எண்ணெய் ஆகியவற்றின் மீதான இறக்குமதி வரியை இந்தியா குறைத்துள்ளது.
    - இந்திய அரசு RBD எண்ணெயை இறக்குமதி பட்டியலில் "தடையற்ற" என்ற நிலையிலிருந்து "வரையறுக்கப்பட்ட" என்ற நிலைக்கு மாற்றியுள்ளது.
- ஐரோப்பிய நாடாளுமன்றமானது CAA (குடியுரிமை திருத்தச் சட்டம் - Citizenship Amendment Act) எதிர்ப்புத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு ஒத்திவைக்க முடிவு செய்துள்ளது.
- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் இறப்பிற்கு அஞ்சலி செலுத்துவதற்காக தியாகிகள் தினம் அல்லது சர்வோதயா தினமானது ஜனவரி 30 அன்று அனுசரிக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## MGNREGA திட்டம் - நிதிப் பற்றாக்குறை

- சமீபத்தில் MGNREGA (மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத வேலைவாய்ப்புச் சட்டம்) திட்டமானது தனது நிதியியல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த நிதியியல் அறிக்கையின் படி, கிட்டத்தட்ட 96% நிதி ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் நிதியியல் அறிக்கையின் படி, 15 மாநிலங்கள் சிவப்பு நிலையில் உள்ளன. அதாவது இதன் பொருள் (சிவப்பு நிலை) நிதிப் பற்றாக்குறை அல்லது நிதி கிடைக்கவில்லை என்பதாகும்.

## மருத்துவக் கருக் கலைப்பு (திருத்தம்) மசோதா, 2020

- மருத்துவக் கருக் கலைப்பு (திருத்தம்) மசோதா, 2020 என்ற ஒரு மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது மருத்துவக் கருக் கலைப்புச் சட்டம், 1971 என்ற ஒரு சட்டத்தைத் திருத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவின் படி, கருக் கலைப்பானது 24 வாரங்களுக்கு நீட்டிக்கப்பட இருக்கின்றது. இது முன்னர் 20 வாரங்களாக இருந்தது.
- இந்த நீட்டிப்பானது சிறப்பு வகையைச் சேர்ந்த பெண்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவர்கள், பாலியல் பலாத்காரத்தில் இருந்து மீண்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிப் பெண்கள் போன்ற பிற பாதிக்கப்படக்கூடிய பெண்கள் இதில் அடங்குவர்.
- இந்தத் திருத்தங்கள் ஆனது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் முன்மொழியப் பட்டுள்ளன.
- இந்தியாவில் கருக் கலைப்பின் சமூக - கலாச்சார மற்றும் மருத்துவம் சார்ந்த அம்சங்களை மறுஆய்வு செய்வதற்காக ஷா குழு அமைக்கப்பட்டுள்ளது.

- இந்தக் குழுவானது முதல் முறையாக கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்கப் பரிந்துரைத்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பிரெக்ஸிட்டை நினைவுகூரும் வகையில் புதிய 50 பென்ஸ் நாணயம்

- பிரெக்ஸிட்டை நினைவுகூரும் வகையில் புதிய 50 பென்ஸ் (நாணய அலகு) நாணயத்தை பிரிட்டிஷ் அரசு வெளியிட்டுள்ளது.
- இந்த நாணயத்தில் "எல்லா நாடுகளுடனும் அமைதி, செழிப்பு மற்றும் நட்பு" என்ற வெட்டெழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி முதல் அந்நாட்டின் தபால் நிலையங்கள், வங்கிகள் மற்றும் கடைகள் ஆகியவற்றிலிருந்து சுமார் 3 மில்லியன் நாணயங்கள் விநியோகிக்கப்பட உள்ளன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## SISDP - மேம்பாட்டுத் திட்டம்

- SISDP எனப்படும் கிராமப்புற இயற்கை வளங்களின் செயற்கைக்கோள் பட அடிப்படையிலான தரவுத் தளமானது இஸ்ரோ அமைப்பினால் தொடங்கப் பட்டுள்ளது.
- பரவலாக்கப்பட்ட திட்டமிடல் திட்டத்திற்காக விண்வெளியை அடிப்படையாகக் கொண்ட தகவல் உதவித் திட்டமானது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக (SISDP - Space-based Information Support for Decentralised Planning programme) 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- SISDP திட்டத்தின் முதலாவது நிலையானது 2016 – 17 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.
- SISDP திட்டத்தின் முதலாவது நிலையின் போது பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், 'SISDP - மேம்பாட்டுத் திட்டம்' ஆனது தொடங்கப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ராம்சார் தளங்கள் - இந்தியா

- ராம்சார் ஒப்பந்தத்தால் பாதுகாக்கப்பட்டு வரும் தளங்களில் இந்தியா மேலும் 10 ஈரநிலங்களைச் சேர்த்துள்ளது.

- இதன் மூலம், ராம்சார் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவில் மொத்தம் 37 தளங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- சமீபத்தில் ராம்சார் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ள 10 தளங்களில், மகாராஷ்டிரா (நாந்துர் மாதமேஸ்வர் பறவைகள் சரணாலயம்) மாநிலமானது தனது முதலாவது ராம்சார் தளத்தைப் பெற்றுள்ளது.

| வரிசை எண் | மாநிலங்கள் | ராம்சார் தளங்கள் |
|---|---|---|
| 1 | மகாரஷ்டிரா | 1. நந்தூர் மாதமேஸ்வர் பறவைகள் சரணாலயம் |
| 2 | பஞ்சாப் | 2. பியாஸ் பாதுகாக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட காடுகள்<br>3. கேஷோபூர் - மியானி சமூக காடுகள்<br>4. நங்கல் வனவிலங்கு சரணாலயம் |
| 3 | உத்தரப் பிரதேசம் | 1. நவாப்கஞ்ச் பறவைகள் சரணாலயம்<br>2. பார்வதி அர்கா பறவைகள் சரணாலயம்<br>3. சமன் பறவைகள் சரணாலயம்<br>4. சர்சாய் நவார் ஏரி<br>5. சமஸ்பூர் பறவைகள் சரணாலயம்<br>6. சாண்டி பறவைகள் சரணாலயம் |


***ராம்சார் ஒப்பந்தம் மற்றும் மாண்ட்ரெக்ஸ் பட்டியல் பற்றி***

- ராம்சார் ஒப்பந்தம் என்பது ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 அன்று கையெழுத்தானது.
- மாண்ட்ரெக்ஸ் பட்டியல் என்பது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ராம்சார் ஈரநிலங்களின் பட்டியலில் உள்ள ஈரநில தளங்களின் பதிவுகளாகும்.
- கியோலேடியோ தேசியப் பூங்கா (ராஜஸ்தான்), லோக்டாக் ஏரி (மணிப்பூர்) ஆகியவை மாண்ட்ரெக்ஸ் பட்டியலில் உள்ள இந்திய தளங்களாகும்.
- ஈரமான நிலங்களைப் பாதுகாப்பது நல் சே ஜல் என்ற திட்டத்தை அடைய உதவும். இந்தத் திட்டமானது 2024 ஆம் ஆண்டிற்குள் நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் நீர் இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆப்பிரிக்கச் சிறுத்தை – இந்தியாவிற்குக் கொண்டு வருதல்

- ஆப்பிரிக்கச் சிறுத்தையை இந்தியாவிற்குக் கொண்டு வர அனுமதியளித்து இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்தச் சிறுத்தையானது (அசினோனிக்ஸ் ஜுபாடஸ்) சோதனை அடிப்படையில் இந்தியாவிற்குக் கொண்டுவரப் படுகின்றது.
- ஆபிரிக்கச் சிறுத்தைகள் நமீபியாவிலிருந்து இந்தியாவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு, மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ - பால்பூர் வனவிலங்கு சரணாலயத்தில் வைத்து வளர்க்கப்படும் என்று தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது (National Tiger Conservation Authority - NTCA) இதற்கு முன்பு இந்திய உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.
- இந்த இடமாற்றத்திற்கு பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றமானது (International Union for Conservation of Nature - IUCN) "தடையின்மை அனுமதியை" வழங்கியுள்ளது.

- இந்தியாவில் வேட்டையாடப்பட்டு அழிந்துபோன ஒரே பாலூட்டி சிறுத்தை மட்டுமே ஆகும்.
- IUCN நிலை: "பாதிக்கப்படக்கூடிய இனங்கள்".
- புவியியல் வாழிடம்: வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் ஈரானில் உள்ள ஒரு சில பகுதிகள்.
- இந்தியாவில் சிறுத்தை: 1947 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் இந்த இனம் அழிந்துவிட்டது.






# மாநிலச் செய்திகள்

## நீடித்த (வளம் குன்றா) வளர்ச்சி இலக்குகள் செயல்திறன் பட்டியல்

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (United National Development Programme - UNDP) கருத்துப் படி, நீடித்த (வளம் குன்றா) வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals - SDG) அடைவதில் தெலுங்கானா மாநிலம் சிறப்பான செயல்பாடு கொண்ட மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், இந்தியா SDG இந்தியா என்ற ஒரு குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- SDG குறியீட்டை வெளியிட்ட முதலாவது நாடு இந்தியாவாகும்.
- இந்தக் குறியீடானது நிதி ஆயோக் அமைப்பினால் வெளியிடப்பட்டது.

| S. No | State | Score |
|---|---|---|
| 1 | Telangana | 82 |
| 2 | Andhra Pradesh | 72 |
| 3 | Karnataka | 72 |

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலக நீடித்த (வளம் குன்றா) வளர்ச்சி உச்சி மாநாடு

- உலக நீடித்த (வளம் குன்றா) வளர்ச்சி உச்சி மாநாடானது (WSDS - World Sustainable Development Summit) புது தில்லியில் உள்ள வாழ்விட மையத்தில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த உச்சி மாநாடானது இதற்கு முன்பு தில்லி நீடித்த (வளம் குன்றா) வளர்ச்சி உச்சி மாநாடு என்று அழைக்கப்பட்டது.
- WSDS என்பது எரிசக்தி மற்றும் வள நிறுவனத்தினால் (TERI - The Energy and Resources Institute) ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- இது 2001 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.
- இந்த நிகழ்வின் கருப்பொருள்: '2030 ஆம் ஆண்டை நோக்கி: அடுத்த பத்தாண்டை நோக்கிய பயணத்தை உருவாக்குதல்' என்பதாகும்.




# முக்கிய தினங்கள்

## உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் - ஜனவரி 30

- இந்தத் தினமானது வெப்பமண்டல நோய்கள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குகின்றது.
- உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் (Neglected Tropical Diseases - NTD) அனுசரிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் பாக்டீரியா, புளுவினம், வைரஸ்கள் மற்றும் புரோட்டோசோவா போன்ற நோய்க் கிருமிகளால் ஏற்படுகின்றன.
- இவை ஆசியா, ஆபிரிக்கா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்றன.
- இந்தியாவின் பொதுவாகக் காணப்படும் NTD நிணநீர் யானைக்கால் நோய் ஆகும்.




## உலகத் தொழுநோய் தினம் - ஜனவரி 30

- உலகத் தொழுநோய் தினமானது ஜனவரி கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று அனுசரிக்கப்படுகின்றது. இது தொழுநோய் குறித்த பொது விழிப்புணர்வை அதிகரிக்க முற்படுவதுடன், குழந்தைகளில் தொழுநோய் தொடர்பான குறைபாடுகளற்ற இலக்கின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்தியாவில் இத்தினமானது மகாத்மா காந்தியின் இறப்பை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 30 ஆம் தேதி கொண்டாடப்படுகின்றது.
- தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களிடம் வாழ்நாள் முழுவதும் இரக்கம் கொண்டிருந்த காந்திக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இந்தத் தினமானது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "தொழுநோய்களின் களங்கத்தை மாற்றுகின்றது" என்பதாகும்.
- தொழுநோய் என்பது ஒரு தொற்று நோயாகும். இது உடலில் உள்ள கைகள், கால்கள் மற்றும் தோல் பகுதிகளில் கடுமையான, சிதைக்கும் தன்மையுள்ள தோல் புண்கள் மற்றும் நரம்பு ஆகியவற்றில் சேதத்தை ஏற்படுத்துகின்றது.



# இதரச் செய்திகள்

## நிதி ஆயோக்கின் இலட்சிய மாவட்டங்களின் தரவரிசை

- நிதி ஆயோக் அமைப்பானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான நாட்டின் இலட்சிய மாவட்டங்களின் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் சண்டெளலி மாவட்டமானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 57.6 மதிப்பெண்களைப் பெற்று இந்தப் பட்டியலில் முதலிடத்தைத் பிடித்துள்ளது.
- இந்தத் தரவரிசையானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆறு வளர்ச்சிப் பகுதிகளில் 112க்கும் மேற்பட்ட இலட்சிய மாவட்டங்கள் மேற்கொண்ட செயல்பாடுகளின் முன்னேற்றத்தை கணக்கில் எடுத்துக் கொண்டது.
- சுகாதாரம் & ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர்வளம், நிதியியல் உள்ளடக்கம், திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவை இந்த ஆறு வளர்ச்சிப் பகுதிகளாகும்.
- இலட்சிய மாவட்டங்கள் திட்டமானது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ஒவ்வொரு மாதமும் இலட்சிய மாவட்டங்கள் தரவரிசைப்படுத்தப் படுகின்றன.

| S.No | District | State |
|---|---|---|
| 1 | Chandauli | Uttar Pradesh |
| 2 | Balangir | Odisha |
| 3 | Y.S.R. | Andhra Pradesh |
| 4 | Sahibganj | Jharkhand |
| 5 | Hailakandi | Assam |




## நிதிநிலை அறிக்கை உருவாக்கம் - டிரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல் அமைப்பின் அறிக்கை

- டிரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல் அமைப்பினால் நடத்தப்பட்ட ஆய்வின் படி, நிதிநிலை அறிக்கை தயாரிப்பதில் அசாம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இதைத் தொடர்ந்து இந்தப் பட்டியலில் ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்கள் உள்ளன.
- இந்தப் பட்டியலில் கோவா, மகாராஷ்டிரா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் நிதிநிலை அறிக்கை தயாரிப்பின் அடிப்படையில் கடைசி இடங்களில் உள்ளன.
- சர்வதேச அரசு சாரா அமைப்பானது ஊழல் காரணமாக எழும் குற்றச் செயல்களைக் கண்காணித்து, அவற்றைத் தடுக்கின்றது.
- இது ஆண்டுதோறும் உலகளாவிய ஊழல் குறியீட்டை வெளியிடுகின்றது.
- இதன் தலைமையகம் ஜெர்மனியில் அமைந்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★